இதழ்-84

01.06.2025

# துமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 குழந்தைகளின் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய வேண்டியது சமூகத்தின் கடமை

06 சொந்த நீருக்குள் மூழ்கும் வாத்துகள்

09 அறத்தின் நாயகன் கலாநிதி. ஆறு திருமுருகன்

21 சீனப் பெருஞ்சுவரின் கதை

23 காகம் உடம்பு சரி இல்லாமல் இருக்கும் போது எறும்புகளைத் தேடுகிறது.

24 யாழ் பல்கலை நுண்கலைத்-துறையினரின் மரபுரிமைமாறும் தளம் காண்பியக் காட்சி

31 வகுப்பறையில் உறங்கிய மாணவன் உலகம் போற்றும் அறிஞன் ஆன கதை

35 தண்டவாளத்தில் இருந்து மின்சாரம் எடுக்கப்போகும் சுவிட்சர்லாந்து

38 யாழ் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா-2025

40 பொறியியலாளர் சி. தயாபரன் அவர்களுக்கு துமியின் இதய அஞ்சலி

42 யாழ்ப்பாண விவசாயத்தின் பாரம்பரிய நீர்ப்பாசனக் கருவி துலா

44 விராட் எனும் ஒரு போர் வீரனின் ஓய்வு

ஆசிரியர் பதிவு

# குழந்தைகளின் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய வேண்டியது சமூகத்தின் கடமை

இன்றைய காலக்கட்டத்தில் குழந்தைகளை பாதுகாப்பாக வளர்ப்பது என்பது ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது. நம் தேசத்தில் குழந்தைகள் வீடு, பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், மக்கள் கூடிய இடங்கள் என அனைத்து சூழல்களிலும் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக பெண் குழந்தைகள் பாலியல் வன்முறையில் பலியாகுவதும், அதனைத் தடுக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததுமாக காணப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு எவ்வாறு ஒரு நியாயமான தீர்வு வழங்க முடியும் என்பதற்கான ஒரு நல்வழிகாட்டியாக இருக்கிறது. ஒரு





மாணவிக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்முறையை அந்நாட்டின் சட்டப்பாதுகாப்பு அமைப்பு மிக வேகமாக கையாள்கிறது. குற்றவாளி விரைவில் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றார். அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் தனிப்பட்ட விவரங்கள் பாதுகாக்கப்பட்டன.

இது சரியான விசாரணையும், பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பையும் முன்னிலைப்படுத்திய ஒரு முறையாகும். இந்த முறை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கக்கூடும்.

அந்த வரிசையில் நம் தேசத்தில் நடக்கும் பல சம்பவங்களில் நீதி கிடைக்காமை தான் பெரும் கவலையளிக்கிறது. இசைப்பிரியா முதல் அநுராதபுர வைத்தியர், அண்மையில் கொழும்பில் தற்கொலை செய்து கொண்ட மாணவி போன்ற நபர்களின் கதைகள் ஒரு கட்டத்தில் ஊடகங்களில் பேசப்படும். ஆனால் அதன் பிறகு மறக்கப்பட்டு விடுகின்றன. இது ஒரு சமூகமாக நாம் உணர்ச்சிபூர்வமாக மட்டும் நடந்து கொள்ளாமல், உண்மையான மாற்றத்திற்காக செயல்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது
.

பாலியல் குற்றங்களை தவிர்க்க வேண்டுமெனில், சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்பது நிச்சயம். ஆனால் அதைவிட முக்கியமானது – விழிப்புணர்வை ஏற்படுத்துவது. பாலியல் கல்வி பாடசாலை மட்டுமின்றி பெற்றோர்களாலும் வீட்டிலேயே குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டும். குழந்தைகள் எதை ”அருவருப்பான” என நினைத்து பேசாமலிருக்கிறார்களோ, அதுவே அவர்களை ஆபத்துகளுக்குள் இட்டுச் செல்கிறது. அதற்காக பெற்றோர்கள் திறந்த மனதுடன் பேசுவது அவசியம்.



மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு

நேர்மையான நீதியும், பாதுகாப்பும் கிடைக்க வேண்டும். இது தான் மற்றவர்களுக்கான எதிர்வினையாகவும் செயல்படும். சரியான வழக்குப் பராமரிப்பு, நீதிமன்றத் தீர்ப்புகள், ஊடக ஒழுங்குமுறை ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே, குற்றங்களைத் தடுப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைப்பதும் சாத்தியமாகும்.

அதோடு பாதிக்கப்பட்டவர்களையும் அவர்கள் சார்ந்தவர்களையும் ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுவது தடுக்கப்பட வேண்டும். ஊடகங்கள் சமூக பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

முடிவில், குழந்தைகளை பாதுகாப்பது தனிப்பட்ட முறையில் பெற்றோர்களின் மட்டுமல்ல, அரசாங்கத்தின், சட்ட அமைப்பின், கல்வி அமைப்பின், ஊடகங்களின் மற்றும் முழு சமூகத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

வரி வசூலிக்கப்படுகின்ற அளவுக்கு நியாயமான சேவைகள் வழங்கப்பட வேண்டும். ஒரு குழந்தையின் பாதுகாப்பை நாம் உறுதி செய்யும்போது தான் ஒரு நாட்டு எதிர்காலத்தை நிச்சயமாக்குகிறோம்.






மாலை நேரம். சூரியன் கீழே சாய்ந்தபின், ஏரியின் மேற்பரப்பு ஒரு மென்மையான வெண்கலக் கண்ணாடி போல மெதுவாக ஒளிர்கிறது. அள்ளி வீசுகிற காற்று அவசரமான மனிதர்களையும் அந்த அழகை நின்று சுகிக்க வைக்கிறது.

ஆர அமர்ந்து இரசிப்பதற்கே என இயற்கை தந்த ,ருக்கையாய் ஒரு பெரிய கல் ஏரிக்கரையில் நிலை கொண்டிருந்தது. அதில் அமர்ந்திருந்தாள் அமுதா, எழுத்தாளர், எளிமையானவள், பார்வைகளுக்குள் பல கதைகள் புதைத்தவள். இன்று ஏதாவது எழுத வேண்டும் என்கிற ஈர்ப்பே அவளை இங்கு கொண்டு வந்து அமர்த்தியது. ஆனால் எழுத வார்த்தைகள் எதுவும் வரவில்லை. கையிலிருந்த நாட் குறிப்பேடு வெறுமையாக இருந்தது.

திடீரென்று கீச்சுக்கீச் என்று ஓர் ஒலி கேட்டது. அமுதா மெதுவாக தலையைத் திருப்ப, வாத்துகளின் ஒரு கூட்டம், நீரில் வட்டமாகச் சுற்றிக் கொண்டிருந்தது. பெரிய கூட்டம் இல்லை — பதினைந்து வாத்துகள். ஆனால் அவற்றின் சுழற்சி… அதை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவை ஒன்றன்பின் ஒன்றாய் முன்னோக்கி சுழன்றன. எதையோ தேடுவது போலவும் இல்லை, ஓய்வெடுப்பது போலவும் இல்லை. ஒருவிதமான ஒழுங்கு. ஒருவிதமான நம்பிக்கை.

ஒருவிதமான, ஒற்றுமை.
அமுதா தன்னையே கேட்டுக் கொண்டாள்:

“இவையெல்லாம் ஒத்திகையே பார்க்காத நடனங்கள்...
யாரும் திட்டமிடாத நடனங்கள்..
நான் இதுவரை பார்த்த ஒவ்வொரு மனிதக் கூட்டத்திலும் ஒரு சிதைவு இருந்தது. ஆனால் இங்கே? அமைதி. இணக்கம். ஒத்திசைவு.”

அவளுக்கு ஞாபகம் வந்தது — அவள் வாழ்வின் நாட்கள். தான் வட்டமாய் சுற்றித்திருந்த கணங்கள். சுமையில்லாத சிரிப்புகள்... அந்த சிரிப்போடு கூடியிருந்த ஏராளம் மனிதர்கள்...

நண்பர்கள் என்று அன்று அவளிற்கு பலர் இருந்தனர். நாளடைவில் சிலர் ஆயினர். இப்போது ஒருவருடனும் அவள் வட்டம் அமைக்கவில்லை. வாத்துகள் அடுத்த வட்டத்தில் வந்தன. ஒன்றின் பின்னே ஒன்று,
சமதூரத்தில். திடீரென்று, ஒன்று தனது சிறகை விரித்தது. மற்றையவை அதை பின்பற்றவில்லை. ஆனால் அச்சிறகுப்பறவையை நிமிர்ந்து பார்த்தன.

அது வானில் உயர்ந்தது. மற்றையவை மெல்ல தங்கள் சுழற்சியை நிறுத்தின. மெதுவாக, தண்ணீரின் மீது திரும்பிச் சென்றன — ஒருவிதமான அமைதியுடன். அமுதா எழுந்தாள். முகத்தில் ஒரு சின்ன சிரிப்பு. அவள் நாட் குறிப்பைத் திறந்தாள்.
முதல் வரிகள்:

“வாத்துகள் ஒருமித்துப் சுழல்வதை நாம் புகழ்வோம்.
ஆனால் ஒருத்தி தனியாக பறக்கின்ற பொழுது —
அதுவும் ஒரு கவிதைதான்.”

அவள் எழுதத் தொடங்கினாள்.

என்றோ படித்த கவிதை இன்று அவள் நினைவில் வந்தது.
“ஒரு அழகு பட்டாம்பூச்சி
அமரவரும் பொழுது
உள்ளங்கை இரண்டையும்
அகல விரித்து

வாங்கிக் கொள்வதைப்போல
அது கைகளிலிருந்து பறந்து செல்ல
முற்படும் போது
அகல விரித்து விட்டுவிடும்
தைரியம்
வாழ்க்கையில் இருந்துவிட்டால் போதும்

அதை யாரோ முன்பே எழுதியதாக நினைத்தாள். ஆனால் அந்த வார்த்தைகள் அவளுக்குள் புதிதாய் பேசின. தன் தைரியத்தை ஒரு கணம் பாராட்டிக் கொண்டாள்.
அவளுக்குத் தோன்றியது. சேருவதும் கூடுவதுமே மகிழ்வென்றால் சுதந்திரம் என்பதென்ன?

இங்கே வாத்துகள் தங்களுக்குப் பிடித்ததை மட்டுமே செய்கின்றன.
தன் சுகத்தில், தன் குரலில் வாழ்கின்றன.
அவைகளுக்காக யாரும் கவிதை எழுதவேண்டுமென தேவையில்லை
அவற்றிற்கு அவை உண்மையாக இருப்பதே போதும்.

அதுவே அமுதாவுக்குப் புதிய உணர்வாய் அமைந்தது.

"நானும் ஒரு வாத்து போலத்தான்.
என் வாழ்க்கையை யாராவது கவிதையாக்குவார்கள் என்பதற்காக அல்ல...ஆனால் நான் என் சொந்த நீருக்குள் மூழ்குவதற்காக,
என் சுதந்திரத்தின் வாலைக் கிளர்த்துவதற்காக வாழ்கிறேன்
என் சுகத்தில்..

என்று எழுதி முடித்தாள்..
நாட்குறிப்பை மூடினாள்.

சிறகை விரித்தது போல்
வேகமாக எழுந்தாள்.
அள்ளி வீசிய காற்று
அவளை வாரி அணைத்துக்
கொண்டது.



# அறத்தின் நாயகன் கலாநிதி. ஆறு திருமுருகன்



**’செயற்கரிய செய்வார் பெரியர்’ என்பதற்கு இலக்கணமாகத் திகழும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனாருக்கு அகவை 64. இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஐயா**



கோப்பாய் வராம்பற்றை, இலுப்பையடிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஆசிரியர் கந்தையா ஆறுமுகம் – இணுவிற்பதி ஆசிரியை சரஸ்வதி ஆறுமுகம் ஆகியோரின் புதல்வராக 1961 மே மாதம் 28 ஆம் திகதியன்று பிறந்தவர் திருமுருகன் அவர்கள்.

ஆரம்பக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியானார். 1989 இல் ஆசிரியராக நியமனம் பெற்று 2012 இல் ஸ்கந்தவரோதயக்



கல்லூரியின் அதிபராக சேவையில் இருந்து இளைப்பாறுகை பெற்றார்.

இலங்கையில் திருக்குறளுக்கு முதன்முதலாக உரைவகுத்து முப்பாநூற்சர்க்கம் என வெளியிட்ட பண்டிதர் வி.வேலுப்பிள்ளை இவரது குடும்ப மூதாதை என்பது குறிப்பிடத்தக்கது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவுக்குப் பின் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை செயற்படுகின்றார்.

கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் செயற்படும் இவர், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம் என்பன தோற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்ததோடு அதன் தலைவராகவும் செயற்படுகின்றார். யாழ்ப்பாணத்தின் பல்வேறு சமய சமூக அமைப்புக்களில் அங்கம் வகிக்கின்றார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிடுகின்ற ‘அருள் ஒளி’ என்ற ஆன்மீக சஞ்சிகையின் ஆசிரியர். இவரது ஆன்மீகச் சொற்பொழிவுகள் அடங்கிய நூல் ஒன்று Thirumurugan’s Spritual Lecturers என்ற பெயருடன் அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்டது.

கீரிமலை சிவபூமி மடம் மற்றும் சிவபூமி கலைக்களஞ்சியம் என்பவற்றின் ஸ்தாபகர், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் என்பவற்றின் உபதலைவர், குப்பிளான் சிவபூமி ஆச்சிரமம். உடுவில் கேன் புற்றுநோயாளர் காப்பகம் என்பவற்றின் பணிப்பாளர், அகில இந்து மாமன்றத்தால் நடத்தப்படும் நல்லூர் இந்து ஆராய்ச்சி நிலையப்பணிப்பாளர் எனப் பல தளங்களில் சமய சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். இவரது சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2011 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



குடும்பத்தின் இளைய மகனாக இவர் அலங்கரித்தார். இவர் இணுவை மண்ணுக்குப் பெருமை சேர்ப்பாரென அன்று எவரும் அறியவில்லை. பெற்றோரின் பண்பான வழி காட்டலில் இவருக்கு இராமநாதன் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கல்விக் கண்ணைத் திறந்தது. யாழ் இந்துக் கல்லூரி அறிவுப் பசிக்குத் தீனியிட்டது.
வித்தகக் குருவாயமைந்த சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும் யாவற்றையும் நெறிப்படுத்தும் இணையற்ற ஆசானுமாகிய இ.மகாதேவா திருமுருகனின் சிறப்பான முன்னேற்றத்துக்கு அடி எடுத்துக் கொடுத்தார்.

உயர் வகுப்பு மாணவர்களின் பேச்சுப் போட்டி, விவாதத்திறமை, கல்லூரி விழாக்களிற் பட்டி மன்றம் யாவற்றிலும் பங்குபற்றிய வேளை இவரின் சிந்தனாசக்தி, நாவன்மையுடன் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய அழகு தமிழ் எளிய நடையில் இனிய குரல் வளம் சிறக்க இறையருள் கைகொடுத்தது கல்லூரியிற் பெற்ற கல்வித் தகைமையுடன் கலைமாணி (B.A ) பட்டப் படிப்பையும், மேல் படிப்பையும் நிறைவு செய்தார். இவருக்கு உடன் வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் எம்மண்ணில் யுத்த நிலை ஏற்பட்டதால் எம்மவரிற் பலர் தமது பாதுகாப்புத் தேடி அலைந்தபோது குடும்பமும் சிதறி அலைந்தது.

பாதுகாப்புத் தேடியபோது திருமுருகனின் இருபத்தாறு வயதான கட்டுமஸ்தான தோற்றமும் அங்கப் பொலிவும் நாட்டில் அமைதியை நிலை நாட்டவந்த படையினர் சந்தேகக் கண் கொண்டு பார்க்க நேர்ந்தது. அப்பாவியான இவரின் உயிரைப் பிரிக்கவல்ல கொடூரமான தாக்குதலுக்கு இலக்கானார். குற்றுயிராய் அல்லலுறும்போது தமது சித்தத்தைச் சிவன்பால் வைத்து எல்லாம் உனக்கே அடைக்கலம் என்று கூறி இறைவனிடம் தமது





உடல், பொருள், ஆவி அனைத்தையும் இணுவில் காரைக்கால் சிவனிடம் ஒப்படைத்தார்.

திருமுருகனின் வேண்டுதலை ஏற்ற இறை மனித வடிவில் வந்து அரவணைத்தது. இறைவனால் ஆட்கொள்ளப்பட திருமுருகன் இல்லறம் நாடாது நலிவுற்றோரை மனித நேயத்துடன் அரவணைக்கும் பாங்கில் சபதம் பூண்டு புதுயுக அருட்சிந்தனையுடன் வலம் வந்தார்.

அவரின் கல்வித்திறமைக்கேற்ப 1989 இல் அரச ஆசிரியர் நியமனம் கிடைத்தது. சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆசிரியரான இவரிடம் கல்விப் பணிகளும் இதர பணிகளும் ஒப்படைக்கப்பட்டன. இறையருளையே சிந்தையாகக் கொண்டவர் பாடசாலையின் சுத்தம் பேணி அங்குள்ள சுற்றுச் சூழலையும் பேணியதுடன் குடிதண்ணீர்க் கிணறு கலக்கி இறைத்தும் மனமகிழ்வு கொண்டார்.

பாடசாலையின் செலவைக்குறைத்து மாணவர்களினுதவியுடன் வகுப்பறைச் சுவர்களுக்கு வெள்ளையடித்துப் பிரகாசிக்க வைத்தார். ஒரு சமயம் பாடசாலைக்கு வருகை தந்த கல்விப் பகுதி உயர் அதிகாரிகள் இவரின் சேவையை மெச்சி இவருக்கு 1991 இல் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தனர். தன் சேவையை மேலோங்கச் செய்த பாடசாலை வளர்ச்சிக்காக ஒரு அறக்கட்டளையை நிறுவி உதவினார்.

இவ்வறப்பணி இவரின் எதிர்கால அறப்பணிகளின் முன்னோடியாகவே அமைந்த சிறப்பாகும். 1993 இல் ஸ்கந்தவரோதயாக் கல்லூ ரிக்கு இட மாற்றாலானார். அறப்பணிகளின் தொடர்புகளும் பதவி உயர்வுகளும் சைவம் பேணிக் கல்வியால் உயர்ந்த நல்லாசிரியருக்குப் புதிய கல்லூரியில் உயர் வகுப்புகளில் சைவ சமயமும் தமிழும் போதிக்கும் பணி தரப்பட்டது. இவரின் தூய சேவையால் பல மாணவர்களின் கல்வியுயர்வும் பரீட்சையில் நற் பெறுபேறுகளும் கிடைத்தன.

இதனால் இக் கல்லூரிக்குப் பெருமையும் இவருக்குப் பல

படியேற்றங்களும் கிடைத்தன. 16.03.2008 அன்று இக் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றார். இக்கல்லூரியின் சேவையால் இவருக்கு வலிகாமம் வலயத்தில் நல்லாசிரியர் விருது இரண்டாவது தடவையாகவும் கிடைத்தது.


இவர் ஆசிரியர் நியமனம் பெற்றது முதல் அண்மையிலுள்ள துர்க்காதேவி ஆலய தரிசனத்தையும் செய்து வந்தார். இவரின் தாயாரும் துர்க்காதேவி அறங்காவலர் சிவத்தமிழ்ச்செல்வியும் ஆசிரியர் பணி சார்பில் ஏற்கனவே பெரு நட்புப் பூண்டிருந்தனர். இவர்களின் உறவு மட்டுமன்றிக் குரு சீடர் முறையாகவும் எதிர்காலத்தில் திருமுருகனே சகல நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்கும் கடமை இருந்ததை அன்னை துர்க்காதேவி தமது திருவிளையாடலில் ஏற்படுத்தினார். திருமுருகனும் சிவத்தமிழ்ச்செல்வியை தாயாகவும் குருவாகவும் ஏற்று அன்னையிட்ட பணியை தூய சிந்தனையுடன் நிறைவேற்றி இவ்வாலயத்தின் அறங்காவலர் சபையின் தலைவராக அரும் பணியாற்றுகிறார்.

இணுவில் காரைக்கால் சிவாலயத்தில் 1992 இல் நடைபெற்ற வருடாந்தப் பெருவிழாக் காலத்தில் திருமுருகனின் சமயத் தொடர் சொற்பொழிவு ஏற்பாடானது. இவரின் பேச்சை முதன் முதலில் கேட்பதற்கென பெருந்தொகையான பொது மக்கள் வயது வேறுபாடின்றி வந்து கூடினர்.

கொடியேற்றத்தன்று பொன்மாலைப் பொழுதில் சொற்பொழிவு ஆரம்பமானது. இயல்பாகவே அமைந்த புன்சிரிப்பும் அடக்கமும் சிவ சிந்தனையும் மேலிட கன்னித்தமிழை நல்விருந்தாக நல்க இச்சிவாலயத்தில் முதன்முதல் ஆரம்பித்தார். இவரின் சொற்பொழிவின் இனிமையும், சொற்சுவை, பொருட்சுவையும் இலக்கண வரம்பு மீறாத ஆன்மிக அருளுரை யாவரையும் வியக்க வைத்தது. இதனால் நாளுக்கு நாள் மேலும் பலர் வந்து கேட்டின்புற்றனர்.

இவரின் சொற்பொழிவின் சிறப்பை உணர்ந்த ஆலயச் சமூகத்தினர் தீர்த்த விழாவின் மறுநாள் மாலை இவருக்கான கௌரவிப்பு விழாவில் “செஞ்சொற் செல்வர்” என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

பொது மக்களும் பொன்னாடை, நறுமலர் மாலை, புகழ் மாலைகளாக நூற்றுக்கணக்கில் அணிவித்து வாழ்த்தினர். இவ்



வைபவச்சிறப்பை இவரின் பெற்ற அன்னை தமது குடும்ப சகிதம் வந்து நேரிற் கண்டு மகிழ்ந்ததுடன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆசீர்வதித்தார். செஞ்சொற்செல்வரின் புகழின் வித்தாக முதன்முதல் சிவாலயத்தில் வழங்கிய சொற்பொழிவின் பெருமை திக்கெட்டும் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் பரவியதால் பட்டி தொட்டி எங்கும் அரிய நிகழ்வாக சொற் பொழிவுகள் அமைந்தன.

பிற மாவட்டங்கள், வெளிநாடுகளிலிருந்தும் இவரின் சொற்பொழிவுக்கான அழைப்புகள் வந்தன. யாவும் இறைவனின் சித்தப்படி நிறைவேறின. இவ்வரிய நிகழ்வின் சிறப்பை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தாம் ஏற்கனவே சென்று பேசிய வெளிநாடுகளுக்குச் சென்று பணி செய்ய ஆலோசனைகளும், ஆதரவும், ஆசியும் பெற்றுத் தந்தார்.

இவர் சென்ற இடங்களில் தமக்கென ஏதும் பெற விரும்பவில்லை. மாறாக இவர் சார்ந்த தொண்டு நிறுவனங்கள் வளர வாய்ப்பு ஏற்பட்டது. திருமுருகனின் அரிய சொற்பொழிவு இலண்டனில் 1999 இல் அகில உலக சைவ மகாநாட்டில் ஒலிக்க உதவிய இணுவிலைச் சேர்ந்த சிவ நெறியாளரும் கல்விமானுமாகிய ந.சச்சிதானந்தன் எம் இலங்கை மண்ணுக்கும் இணுவிலுக்கும் பெருமை சேர வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இலண்டன் சிவயோக அறக்கட்டளையின் சார்பில் இலண்டன் நகரின் பல பாகங்களிலும் நூற்றுக்கணக்கில் சொற்பொழிவுகள் நடை பெற்றன. அதனைத் தொடர்ந்து இவரின் கல்விப் பணியின் விடுமுறைக் காலங்கள் யாவும் வெளிநாடுகளில் புலம் பெயர் தமிழினம் வாழுமிடங்கள் எங்கணும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

2001 இல் சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் ஆசிரியர்களின் உலக மகாநாட்டில் இலங்கையில் தமிழ் இலக்கியம் கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைச்

சமர்ப்பித்தார் 2001 இல் பேரூர் ஆதீனத்தின் அழைப்பை ஏற்றுப் பெரிய முதுபெரும் அறிஞர்கள் மத்தியில் வயதில் குறைந்தவராக இருந்தபோதும் பேச்சுவன்மையால் யாவராலும் பாராட்டப் பெற்றார்.

இதே ஆண்டில் அவுஸ்திரேலிய சிட்னி வாழ் வைத்திலிங்கம் இளலிங்கம் அவர்களின் அழைப்பை ஏற்றுச் சென்று பல இடங்களிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆன்மிக உரைகள் ஆற்றினார்.

2002 இல் ஈவிங்கில் முத்தமிழ் விழாவிற்குச் சென்று உரையாற்றினார். இதே வருடம் சுவிஸில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் உரையாற்றி வையகத்தை வியக்க வைத்தார்.

குறிப்பு .(இளலிங்கம் என்பவர் இணுவிலில் பிறந்து மன்னாரில் வாழ்ந்த மன்னார் chairman வைத்திலிங்கம் அவர்களின் மூத்த மகன் >charted accountant ஆக தொழில் புரிந்து சிட்னி நகரில் ஒரு சமூகத் தொண்டனாக இருக்கிறார் )

2003 இல் சிங்கப்பூர் செண்பக விநாயகராலயத்தில் தொடர் சொற் பொழிவாற்றினார். இதே ஆண்டில் அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் வாழும் எம்மவரின் அழைப்பை ஏற்றுப் பல இனிய சொற்பொழிவை ஏற்படுத்தி மகிழ்வித்தார். 2004 இல் தாய்லாந்தில் ஆன்மிக தலைவர்களுக்கான உலக சுகாதார நிறுவனம் நடத்திய AID S தொடர்பான மகாநாட்டில் இலங்கையின் இந்துமதப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

2004 இல் ஏழாவது தடவையாக இலண்டன் சிவயோகம் முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். 2005 இல் அமெரிக்கா சென்று Texas மாநில மகாநாட்டில் கலந்து சொற்பொழிவாற்றினார்.



இவர் சொற்பொழிவாற்றிய காலத்தில் எம்மண்ணில் ஏற்பட்ட யுத்த கால நிலையால் ஏற்பட்ட அவலங்களை தமது உரையினிடையே தெரிவித்தார்.

இதனால் இவர் அன்பளிப்புக்களைப் பெற

விரும்பாத போதும் எம்மண்ணில் ஏற்பட்ட சிதைவால் பாதிப்புற்ற அநாதைச் சிறுவர்கள், இளம் விதவைகள், கல்வி கற்க வசதியற்ற மாணவர்கள், நோயாளிகள், மருத்துவமனைகளில் பெற முடியாதிருந்த மருத்துவ உதவிகளுக்கான உபகரணங்கள் போன்ற பல்வேறு அறப்பணிகளுக்குத் தாராளமாக உதவிககளை அள்ளிக் கொண்டு வந்து சேர்த்தார். யாழ் மக்களின் துயர நிலையைத் தமது வெளிநாட்டு பிரயாணங்களின் போது எடுத்துக் காட்டியதன் பேறாக எம்மக்களின் துயர் துடைக்கும் வண்ணம் மக்கள் சிந்தித்தார்கள் அதன் பயனாக புலம் பெயர் மக்கள் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு பல உதவிகள் கிடைத்தன.

சிவயோகம் அறக்கட்டளை மூலம் சத்திர சிகிச்சைக்கூடம் அமைத்துக் கொடுத்தமை. இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தை சுவீடனிலிருந்து இறக்குமதி செய்து யாழ் மருத்துவமனைக்கு உதவியது. மேலும் பல அத்தியாவசியக் கருவிகளைப் பெற்றுக் கொடுத்தமை யாவும் மருத்துவமனையின் சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்தின.

யுத்த நெருக்கடியால் பாதுகாப்புத் தேடிய கண்பார்வையற்றவர்கள் நிலையான இடத்தில் தங்க வைக்கப்பட்டனர். புற்றுநோயாளர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யவென ஒரு காப்பகம் நிறுவப்பட்டது. மன அபிவிருத்தி குன்றி வீட்டில் ஒதுக்கி வைக்கப்பட்ட இளஞ்சிறார்களை மேம்படுத்தும் சிவபூமிப் பாடசாலை நிறுவப் பட்டது. இதனால் சிவபூமி அறக்கட்டளை நிதியம் ஆரம்பிக்கப்பட்டதும் இவ்வறக் கட்டளை மூலம் தொல்புரம்,சுழிபுரத்தில் உறவினர்களால் கைவிடப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட முதியவர்களை அன்புடன் பேணும் முதியோர் இல்லம் அமைந்தது.

கீரிமலையில் சைவ அன்பர்கள் தமது இறுதிக் கிரியைகளுக்காகச் செல்லும் போது இளைப்பாறவென சிவபூமிமடம் மற்றும் குப்பிளானில் போர்ச்சூழலாற் பாதிப்புற்ற பலரின் உளநல மேம்பாட்டுக்கான தியானம் அறநெறிக் கல்வி, வாரமொரு நாள் ஏழைகளுக்கான அன்னதானம் யாவும் வழங்கும் சிவபூமி மடம் யாவும் திருமுருகனின் அயராத பணியால் ஏற்பட்டன.

இவரின் வஞ்சகமில்லாத நெஞ்சிலிருந்து உதிக்கும் அன்பான, அமைதியான ஆன்மிக உரைகளும், கறைபடியாத கரங்களின் தூய்மையும், இல்லறம் நாடாது, இறையருளில் தஞ்சமடைந்ததால் தமக்கென ஏதும் தேடாது பொதுவான அறப் பணிக்கு அர்ப்பணித்த

அன்பகலாத அரவணைப்பும் மூலதனமாக அமைந்தன. ஏற்கனவே தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்தவர். சைவநெறியால் உலகமுய்யவென வழிகாட்ட முற்பட்டவரை நாடிய தொண்டு உள்ளங் கொண்ட அறப்பணியாளர்கள் பலர், காணியாகவும், கட்டட உதவிகளாகவும் பொருளாகவும், வாரி வழங்கி எம் மண்ணில் அறப்பணியை அலங்கரித்தனர்.

வெளிநாடுகளில் வாழும் சைவ நிறுவனங்கள் குறிப்பாக சிவயோக அறக்கட்டளை தொண்டுநாதசுவாமிகள் போன்ற பலரின் உற்சாகமூட்டும் உயர்ந்த பங்களிப்புகள் இணுவை மண்ணின் பெருமையை உலகறியச் செய்தன. உலகமெங்கும் பரந்து வாழும் எம்மவர் திருமுருகனின் உயர்வான பணி பரந்தளவில் சேர வேண்டிய இடங்களில் உரிய சேவை கிடைக்கப் பெற்று அவர்கள் துயர் நீங்கி உள்ளம் மலர்வதை நேரிற் கண்டதால் தாம் செய்யும் அறக் கொடையைத் தம்மாலியன்றதைச் செய்ய முன் வந்தனர்.

அவசிய தேவைக் கேற்பத் தாம் அன்றாடம் “உண்ணும்போது ஊருக்கும் ஒரு கைபிடி” என்னும் மகுட வாசகத்தை உணர்ந்து சிறுகச் சேர்த்து யாவரும் வழங்கும் போது பெரு நிதியாக வளர்கின்றது. இந்தநிதி குறிப்பிட்ட தேவைக்கு முறைப்படி பயன்படும் போது இதற்கு நிகரேதுமில்லை. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை புலம் பெயர் தேசம் உணர்ந்ததால் தமது ஊர்களுக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் புகழ் விரும்புவோரும் புகழ் விரும்பாதவரும் இன்று உதவி வருகிறார்கள்.

இன்றைய இளம் சமுதாயம் இதனை உணர்ந்து புலம்பெயர் நாடுகளில் சசகல பொறுப்புகளையும் தூய சிந்தனைப்படி ஒருங்கிணைந்து செயற்படுவது கண்கூடு கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலிய மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் சகல மக்களும் கைகொடுத்து . சமய, சமூகப் பணிகளுக்கும் மற்றும் பல பொதுப்பணிகளுக்கும் இன்று வரை தாராளமாக உதவி வருவது திருமுருகனைப் பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிவத்தமிழ்ச்செல்வியின் தொடர்பால் ஆலயத்தின் சகல பணிகளையும் நிர்வகிக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அம்மையாரின் உதவுகரமாக இருந்து சிறப்பித்ததுடன் அவரின் அறக்கட்டளைக்கும் தாராளமாக வைப்பு நிதியை ஏற்படுத்தவும் உதவினார்.

துர்க்காதேவி திருத்தலம், சிவத்தமிழ்ச்செல்வியின் அறக்கட்டளை நிதியம், சிவபூமி அறக்கட்டளை யாவற்றுக்கும் தனித்தனி கணக்குகளும் நிர்வாக அமைப்புகளும் வேறாக இருந்த போதும் திருமுருகனே யாவற்றுக்கும் தலைமை தாங்குகிறார். இதனால் தமக்குக் கிடைத்த கல்விப் பணியை ஓய்வுப் பணியாக்கி மேற்கூறிய கடமைகளுக்காக அயராது தம்மை அர்ப்பணித்துள்ளார்.

சைவத்துக்கும், தமிழுக்கும், அறப்பணிகளுக்கும் ஆணி வேராக அமைந்து வளர்ந்து வரும் திருமுருகனின் பணிச்சிறப்புக்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினரால் கலாநிதிப் பட்டமும் கிடைக்கப் பெற்றார்.

இவரின் முயற்சியால் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் சிவதட்சணாமூர்த்தி திருக்கோவிலுடன் திருவாசக அரண்மனை உருவாக்கப்பட்டுள்ளது.

21 அடி உயரமான கருங்கல் இரதம் கருங்கல்லில் கையால் உளி கொண்டு செதுக்கப்பட்ட 658 திருவாசக பாடல்கள், பதினோரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிவபுராணங்கள், கருங்கல்லில் உருவாக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் என்பவை கொண்டு திருவாசக நூல் ஆராய்ச்சி நிலையம் திரு திருமதி மனமோகன் சிவகௌரி தம்பதிகளின் அன்பளிப்பால் நிறைவேற்றப்பட்டு 2018 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது.

எம் மண்ணை ஆண்ட 23 மன்னர்களின் உருவச்சிலைகள், புராதன பொருட்கள், அரிய புகைப்படங்கள் ஓவியங்கள், சூரிய குடும்ப கட்டுமானம், எம் மூதாதையர்களின் பயன்பாடு என்பவற்றை கொண்ட சிவபூமி அரும்பொருட் காட்சியகம் ஒன்றும் நாவற்குழியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவரின் சிவபூமி அறக்கட்டளையினால் கட்டாக்காலி நாய்களை பராமரிப்பதற்காக இயக்கச்சியில் 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிவபூமி நாய்கள் சரணாலயம், ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வைத்திய சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காகவும் அபயம் மருத்துவ சேவை நிலையத்தையும் உருவாக்கி நிர்வகித்து வருகின்றார்.

இவற்றை எல்லாம் விட எதிர்கால சிவபூமியின் அறப்பணிக்கு உறுதுணையாக இருக்கவென சுழிபுரம் நாவற்குழி ஆகிய

இடங்களில் வயல்கள் விவசாய பண்ணைகள் பஞ்சாமிர்த தோட்டங்களையும் அமைத்து பராமரித்து வருகின்றார்.

ஆறு திருமுருகன் அவர்கள் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் துர்க்காதேவி தேவஸ்தான தலைவராகவும் பணியாற்றினாலும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவராகவும் திருக்கேதீஸ்வர திருப்பணி சபை உறுப்பினராகவும், யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் என்று பல சமூக மட்ட சங்கங்களிலும் கழகங்களிலும் உறுப்பினராகவும் போசகராகவும் உள்ளார்.

மேலும் அன்று புத்திஜீவிகள் கலைஞர்கள் தென் இந்தியாவுடன் தொடர்பில் இருந்து அங்கும் இங்கும் கலைகள் வளர்ந்தன



.கல்வி கற்க வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. அதனால் தான் வீரமணி அய்யர் ஏரம்பு சுப்பையா போன்றும் தட்சணாமூர்த்தி ,இருத்திராதிபதி போன்றும் இன்னோரன்ன தலைகள் எமது நாட்டை அலங்கரித்தனர் .சிறப்பு பெற்றனர் பெருமை கொண்டனர். எனவே திருமுருகனின் சிந்தனை இந்தத் திசையிலும் பயணிக்க வேண்டும்.

ஊக்கமுள்ள மாணவர்களை கலைஞர்களாக் பேச்சாளர்களாக இந்தத் துறைகளிலும் இந்தியாவுக்கு அனுப்பி பயிற்றுவிக்க



வேண்டும் மேலும் சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் பயிற்சிப் பட்டறைகளை உள் நாட்டில் எங்காவது அமைத்து இளைஞர்களை சுய தொழில் சிந்தனைகளுக்கு ஊக்குவிக்க வேண்டும் .இன்று புலம் பெயர் தேசங்களில் உள்ள திறமைகளை இங்கு எமது தேசத்திலும் உருவாக்க வேண்டும்.

அதை விட முக்கியமான விடயம் என்ன வெனில் புலம் பெயர் தேச மக்களின் அறக் கொடைகளால் மாத்தறை முதல் கீரிமலை வரை அறப்பணிகள் நடைபெறுகிறது.

மேலும் அண்மையில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட பெரும் பணியாக யாழ் போதனா வைத்தியசாலை, யாழ் மருத்துவ பீடம் ஆகியவற்றோடு சிவபூமி அறக்கட்டளை சார்பில் திறந்து வைத்த “பெண்கள் சுக நல நிலையம்”

வட்டுக்கோட்டையில் சென்ற வருடம் திறந்து வைக்கப்பட்ட தேவார மடம், மேலும் ஒரு தமிழ்ப்பணியாக இந்த வருடம் (2025) மாவிட்டபுரத்தில் திறந்து வைக்கப்பட்ட திருக்குறள் வளாகம். அங்கு 1330 குறள்களும் கருங்கற்களில் பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையும், பல மொழிகளில் திருக்குறள் எழுதப்பட்டுள்ளமையும் சிறப்பிற்குரியது.

இவ்வாறு காலத்தின் தேவை அறிந்து அவர் ஆற்றும் பணிகள் ஏராளம் ஏராளம்.... வருடா வருடம் பல சமய, சமூக, தமிழ்ப் பணிகளை செய்து கொண்டே இருக்கிறார்...

ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் உடல் ஆரோக்கியத்துடன் இம்மண்ணில் வாழ்ந்து அறப்பணிகளை தொடர இறைவனின் திருவருளை வேண்டுகின்றோம்......

தொகுப்பு ~ மு.பாபுஜி
பண்ணாகம்



# சீனப் பெருஞ்சுவரின் கதை

சீனப் பெருஞ்சுவரின் வரலாறு, வசந்த மற்றும் இலையுதிர் காலம் (கிமு 771-476) மற்றும் போரிடும் நாடுகள் காலம் (கிமு 475-221) ஆகியவற்றில் பல்வேறு மாநிலங்களால் கட்டப்பட்ட கோட்டைகளுடன் தொடங்கியது, இதில் சீனாவின் முதல் பேரரசர் சின் ஷி ஃஹவாங், புதிதாக நிறுவப்பட்ட சின் வம்சத்தை (கிமு 221-206) உள் ஆசியாவிலிருந்து படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்க கட்டியவை அடங்கும். கிமு 212 வாக்கில், கான்சுவிலிருந்து தெற்கு மஞ்சூரியாவின் கடற்கரை வரை, கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி, மோதிய மண்ணிலிருந்து சுவர்கள் கட்டப்பட்டன.

வடக்கு எல்லையைப் பாதுகாப்பதற்காகப் பிந்தைய வம்சங்கள் வெவ்வேறு கொள்கைகளை ஏற்றுக்கொண்டன. ஹான் (கிமு 202 - கிமு 220), வடக்கு குய் (கிமு 550-574), சூய் (589-618), குறிப்பாக மிங் (1369-1644) ஆகியோர் சுவர்களை மீண்டும் கட்டியவர்களில் அடங்குவர், இருப்பினும், அவை மீண்டும் கட்டப்பட்டு விரிவாக்கப்பட்டன. அவர்கள் கின் முறைகளை அரிதாகவே பின்பற்றினர். ஹான் பெரும்பாலான கோட்டைகளை மேற்கு நோக்கி விரிவுபடுத்தினார், குய் சுமார் 1,600 கிலோமீட்டர் (909 மைல்) புதிய சுவர்களைக் கட்டினார், அதே நேரத்தில் சுய் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை சுவர் கட்டும் முயற்சிகளில் திரட்டினார். இதற்கு நேர்மாறாக, டாங் (618-907), சாங் (960-

1279), யுவான் (1271-1368), மற்றும் குய் (1644-1911) ஆகியோர் உள் ஆசியாவிற்கு வேறு தீர்வுகளைத் தேர்ந்தெடுத்து, உள் சுவர்களை அதிகம் கட்டவில்லை. இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ராஜதந்திரம் போன்ற அச்சுறுத்தல்கள்.

தாக்குதல்களுக்கு எதிரான ஒரு பயனுள்ள தடுப்பாக இருந்தாலும், அதன் வரலாறு முழுவதும் பல கட்டங்களில், 1644 ஆம் ஆண்டில் மஞ்சு கிங் ஷான்ஹாய் கணவாய் வாயில்கள் வழியாக அணிவகுத்துச் சென்று சுவர் கட்டும் வம்சங்களில் மிகவும் உற்சாகமான மிங், சீனாவின் ஆட்சியாளர்களாக மாறியபோது, பெரிய சுவர் எதிரிகளைத் தடுக்கத் தவறிவிட்டது.

இன்று, சீனப் பெருஞ்சுவர் மிங் வம்சத்திலிருந்தே அதிகமாகக் காணப்படுகிறது, ஏனெனில் அவர்கள் சுவரின் பெரும்பகுதியை கல் மற்றும் செங்கலால் மீண்டும் கட்டியெழுப்பினர், பெரும்பாலும் சவாலான நிலப்பரப்புகளில் தங்கள் கோட்டை விரிவுபடுத்தினர். சில பகுதிகள் ஒப்பீட்டளவில் நல்ல நிலையில் உள்ளன அல்லது புதுப்பிக்கப்பட்டுள்ளன, மற்றவை சித்தாந்த காரணங்களுக்காக சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன, அவற்றின் கட்டுமானப் பொருட்களுக்காக அகற்றப்பட்டுள்ளன, அல்லது காலத்தின் அழிவுகளால் இழக்கப்படுகின்றன. வெளிநாட்டினரை ஈர்க்கும் ஒரு பொருளாக இருக்கும் இந்த சுவர் இப்போது ஒரு மதிக்கப்படும் தேசிய சின்னமாகவும் பிரபலமான சுற்றுலா தலமாகவும் உள்ளது.



# காகம் உடம்பு சரி இல்லாமல் இருக்கும் போது எறும்புகளைத் தேடுகிறது.

ஆம்! நீங்கள் படித்தது போலவே. ஒரு காகம் உடல் நிலை சரி இல்லாமல் இருக்கும் போது, அது எறும்புக் கூட்டின் அருகே அமர்ந்து, அதன் இறக்கைகளை விரித்து, அசையாமல், எறும்புகளைத் தாக்க அனுமதிக்கிறது. அவர்கள் அதை ஒரு சக்தி வாய்ந்த காரணத்திற்காக செய்கிறார்கள்.

எறும்புகள் கடிக்கும் போது, அதன் உடலில் இருந்து ஃபார்மிக் அமிலத்தை தெளிக்கின்றன.

இது இயற்கையான ஆன்டி- பாராசிட்டிக் ஆக செயல்படுகிறது. இந்த அமிலம் காகத்தில் பூஞ்சை, பாக்டீரியா மற்றும் ஒட்டு உண்ணிகளை அகற்ற உதவுகிறது, மருந்து தேவை இல்லாமல் மீட்க அனுமதிக்கிறது.

இந்த நடத்தை ”ஆன்ட்டிங்” என்று அழைக்கப்படுகிறது மற்றும் பல்வேறு பறவை இனங்களில் காணப்படுகிறது. விலங்கு சுய மருந்துக்கு இது ஒரு நம்ப முடியாத உதாரணம். இயற்கை அதன் அமைதியான ஞானத்தால் நம்மை வியப்பில் ஆழ்த்துவதில் வியப்பு இல்லை.



# யாழ் பல்கலை நுண்கலைத்துறையினரின் மரபுரிமை: மாறும் தளம் காண்பியக் காட்சி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் நுண்கலைத்துறை நான்காம் வருட கலை வரலாறு மாணவர்களின் ஏற்பாட்டில் 2025.04.22 தொடக்கம் 2025.04.26 வரையிலான காலப்பகுதியில் மரபுரிமை: மாறும் தளம் என்ற தலைப்பிலான ஓர் காண்பியக் காட்சி நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் நடைபெற்றது. இக்காண்பியக் காட்சியில் யாழ்ப்பாணத்தின் வரலாறு, பண்பாட்டைக் கூறத்தக்க கட்டடங்களின் இடிபாடுகளுக்கு இடையிலுள்ள மௌனம், அதில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அதன் பின்னாலான காரணங்கள், எமது மூதாதையரின் அன்றாடப் பாவனைப் பொருட்களில் பதிந்துள்ள பெறுமானங்கள், படிப்படியாக மாறிக்கொண்டிருக்கும் பாரம்பரிய கைவினைகள், பயில்வுகளின் பின்னாலான தொட்டுணரத்தக்க, தொட்டுணரமுடியாத பெறுமானங்களைக் காண்பியப் படைப்பாளிகளின் மொழியில் காட்சிப்படுத்தினர்.

இக் கண்காட்சியின் மையக் கருத்தான மரபுரிமை என்பது "ஒரு சமூகக் குழுமத்தின் வாழிடம் சார்ந்ததும் அவ்வாழிட நிலவரங்களினால் காலந்தோறும் உற்பத்தி செய்யப்பட்டுக் கைமாற்றப்பட்டு வருகின்றதுமான அனைத்தும் ஆகும். கடந்த காலத்திலிருந்து வருவதும் மரபினால் கைமாற்றப்படுவதுமான கடந்த காலத்தின் தடயங்களாகவுள்ள வரலாற்று இடங்கள், கட்டடங்கள், இயற்கைத் தனிச்சிறப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தற்காலச் சமூகத்தின் பரம்பரைத் தனி அடையாளங்கள் மரபுரிமை ஆகும்." எனப் பாக்கியநாதன் அகிலன் குறிப்பிடுவதற்கிணங்க மரபுரிமை என்பது கடந்த காலத்திலிருந்து பெறப்பட்ட வளங்களின் தொகுதியாகும்.

இது மக்களின் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் பெறுமானங்கள், நம்பிக்கைகள், அறிவு மற்றும் பாரம்பரியத்தின் பிரதிபலிப்பாக சுயாதீனமாக அடையாளப்படுத்தும் உரிமைத்துவம் ஆகும்.

மரபுரிமை எனும் பதம் மிகவும் சிக்கலானது. இலங்கை போன்ற ஒரு நாட்டில் தொல்லியலும் மரபுரிமையும் ஒன்றுடனொன்று இணைந்தனவாய் பார்க்கப்படுகின்றதோடு சிறுபான்மையினங்கள் பல்வேறு திட்டமிட்ட செயல்களால் மரபுரிமை சார்ந்த ஓர் நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவ்வேளையில் யாழ்ப்பாணமும் அதன் பலாபலன்களை நீண்ட நாட்களாக அனுபவித்து வருகின்றது. காலனித்துவம், முப்பது வருட யுத்தத்தின் விளைவான இடப்பெயர்வு, புலப்பெயர்வு, இராணுவமயமாக்கம், வீதி அகலிப்பு, நவீனமயமாதல் அல்லது புதுமையை விரும்புதல், அரும்பொருள் திருட்டும் வியாபாரமும், பொதுமக்களின் அக்கறையீனமும் தெளிவின்மை ஆகியன மரபுரிமையைப் பெரும் பூதாகரமான அழிவின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளது.

இதனால் தமிழர் தம் இருப்பையும் வரலாற்றையும் சொல்லும் இடங்களும், கட்டடங்களும், பொருட்களும், பயில்வுகளும் இங்குள்ள சமய, அரசியல், பொருளாதார, கலாசாரக் காரணிகளால் மிக விரைவான மாற்றங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டு வருகின்றன. இதனைப் பேசுவதாகவே ,க்காண்பியக் காட்சியிலுள்ள படைப்புகள் அமைகின்றன.

இக்காட்சியில் கலைக்கூடத்தின் முதலாவது பகுதியாக மாறும் இடங்கள் எனும் தலைப்பில் மு.கனகசபை, பிரதீப் தலவத்த, மனோ பிரசாத் ஆகியோரின் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டது. அந்த வகையில் காலனியத்திற்கு முற்பட்ட, காலனியத்திற்கு



பிற்பட்ட, போருக்குப் பிற்பட்ட உள்நாட்டு முரண்பாடு, வன்முறை, இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அழிவுகள் என்பவற்றினால் மாற்றத்திற்கு உள்ளான மரபுரிமை அடையாளங்களாகிய சில கட்டடங்களிற்கான படைப்பாளிகளின் எதிர்வினைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதாவது மு.கனகசபையின் போருக்கு முற்பட்ட கோட்டை என்ற ஓவியமானது கட்டட நிலவுருவை ஆவணப்படுத்தியிருப்பினும் அதனைச் சூழ பல ஆண்டு காலமாக நிகழ்ந்த பல்வேறு அரசியல் பதட்டங்கள் அந்நிலவுருவில் ஏற்படுத்திய மாற்றங்களை நினைவுபடுத்துகிறது. இவரது நல்லூர் தேர்த் திருவிழா என்ற ஓவியமானது நல்லூரின் பழைய கட்டடக்கலை, ஆலயத்தின் தேர்த் திருவிழா, சடங்கு முறைகள் என்பவற்றை தான் வாழும் காலத்தில் பார்த்தவற்றிலிருந்து ஆவணப்படுத்தியுள்ளார். மனோ பிரசாத்தின் படைப்புகளில் தோன்றும் கட்டடங்களின் முகப்புகள் கொங்கிறீட் மற்றும் கல்லால் ஆனவை அல்ல, மாறாகக் கட்டியவர்களின் அபிலாசைகள், கற்பனைகள், வினோதங்களால் ஆனவை. ஆவை காலம், வெளி, பண்பாடு, ஞாபகம் மற்றும் வரலாறு என்பவற்றின் பதிவுகள். அவை சமூக மாற்றத்தை பிரதிபலிக்கின்றன.

அந்த வகையில் துன்பகரமான சுவர், தலைப்பிடப்படாதது போன்ற இவரது படைப்புக்கள் யாழ்ப்பாண மரபுரிமையின் நீடித்த சாட்சியங்களில் ஒரு அலகாகிய கட்டடங்களின் அழிவிற்கு பின்னாலான காரணங்களை பற்றிச் சிந்திக்கவும், நாம் இழந்த பல கட்டடங்களை மீள எம்மையும் எமது மனப்பதிவிலிருந்து மீட்டிப் பார்க்கவும் அழைக்கிறது.

இதனைத் தொடர்ந்து பிரதீப் தலவத்தேயின் மறைந்து மீண்டும் தோன்றும் நிலப்பரப்பு எனும் படைப்பானது பழைய கட்டங்கள் வீதி அகழிப்புக்குட்படுத்துவதால் ஏற்படும் மாற்றத்தினை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது. இவ்வாறாக இவ் படைப்புக்களானது கட்டட வெளியில் நிலைத்த வடிவாக இருந்தாலும் அதன் பயன்பாடும், பார்வையும் காலத்தோடு மாறிக் கொண்டே இருப்பதனையும் மரபுரிமை என்ற வகையில் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் பறை சாற்றுவதாக உள்ளது.

இதனைத் தொடர்ந்து இக் கண்காட்சியின் பொருட்களும் நகர்வும் என்ற பகுதியானது யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள், வீடுகள் மற்றும் பொதுக்

கட்டடங்களில் இருந்து காணாமலாக்கப்பட்ட, களவாடப்பட்ட, எமது மக்களாலே பழம்பொருட்களாகக் கருதி விற்கப்பட்ட பழைய பாவனைப்பொருட்கள், தளபாடங்களை தனது நினைவிலிருந்து வரைந்திருப்பதனூடு பார்ப்பவர்க்கும் தம் சூழலிலிருந்தும் அவற்றின் மதிப்பை, பெறுமானத்தை உணரும் படி இழந்தவற்றை நினைவூட்டுவதாக கிருஸ்ணப்பிரியா அவர்களது படைப்பான Artefacts from Jaffna என்ற நூலானது காட்சிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கத்தரின் டேனியல் அவர்களது மறைந்த நினைவுகள் (2025) எனும் படைப்பானது தனது பாட்டியின் சமையலறை, பாட்டியின் ஞாபகங்கள், தனது சிறு வயது ஞாபகங்கள் போன்ற சூழலில் கைவிடப்பட்ட பழைய பாவனைப்பொருட்களினை தனது நினைவிலிருந்து வரைந்திருப்பதனூடு அது நவீனத்துவத்தால் மாற்றத்திற்குட்பட்டமையை நினைவூட்டுவதாக இவரது படைப்பு காட்சிப்படுத்தப்பட்டது.

இக் கண்காட்சியின் அடுத்த பகுதியாக பொருட்களும் பயில்வும் என்பதில், கைவினைப் பிரிப்பான திலக்சியா மட்பாண்ட நிறுவனத்தினை சார்ந்த கைவினைஞரினை நேர்காணல் மேற்கொண்டதோடு, மாற்றத்திற்குட்பட்டு தொடர்ந்து பயில்வில் உள்ள கைவினைத்தொழிலினை ஆவணப்படுத்தும் வகையில் தரன் அவர்களது ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கைவினையான நெசவு, மண்பாண்டம் செய்தல், பின்னுதல் போன்ற கைவிடப்பட்ட எமது அடையாளத்தையும் அவை இன்றும் மாற்றத்திற்குட்பட்டு தொடர்ந்து செயலில் இருப்பதையும் நினைவூட்டுவதாக தர்மபாலன் திலக்சன் அவர்களது ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இடைமாறும் வெளியில் மரபுகள் என்ற பகுதியானது சர்மிளா சூரியகுமாரின் பிணைத்தல், முடிச்சுக்களின் தீண்டல் (2023), முடிச்சுக்களின் தீண்டல்(2024) ஆகிய படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இவை இந்து மத நம்பிக்கைகளில் மகப்பேற்றுக்காக, நினைத்தது நிறைவேற வேண்டுமென பல நேர்த்திகளின் பகுதிகளாக மரங்களின் நாணயங்களுடனான துணிகளை முடிச்சிடுதல், தொட்டில்



கட்டுதல் முதல் கிராமத்து தெய்வங்களுடன் இணைத்து மரங்களை புனிதமாக, தல விருட்சங்களாக வணங்கும் முறை காணப்படுவதை நினைவுபடுத்துகின்றன. அதே வேளை இவ் வழிபாட்டின் நோக்கத்தில் இலங்கையின் உள்நாட்டு முரண்பாடு காலத்தின் பின்னர் காணாமலாக்கப்பட்டவர்கள் மீளத் திரும்ப வேண்டும் எனும் வேண்டுதலும் இவ் வழிபாட்டின் பகுதியாக மாறியுள்ளது. இப் படைப்புக்கள் மபுரிமையின் தொட்டுணரமுடியாத அலகாகிய மத நம்பிக்கை, கிராமிய வழிபாடுகளின் அம்சங்களையும் அவற்றின் எச்சசொச்சங்களையும் வெளிப்படுத்தி நிற்பதோடு மரச் செதுக்கலின் அசைவியக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

அதே வேளை பிறைநிலா கிருஸ்ணராஜாவின் வேர்களுடனான வரலாறு: திருநெல்வேலி மரம் செதுக்கும் கிராமம் எனும் டிஜிட்டல் அச்சுக்களாக பிரதி செய்யப்பட்ட புகைப்படத் தொடரானது ஆறுமுகம் ஆச்சாரியால் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆறுமுகம் சிற்பாலயத்தை தொடர்ந்து அவரது பரம்பரையினரின் பட்டறையின் கைவினைஞர்களின் கலைப் பயில்வை ஒளிப்படமாக்கியுள்ளதன் மரபிலிருந்து தற்காலம் வரை அவர்கள் தொடரும் சில தொடர்ச்சிகளையும் அதில் ஏற்பட்டுள்ள அசைவியக்கங்களையும் தொழில்நுட்ப சாத்தியங்கள், சந்தை நிலவரங்களால் விரைவான மாற்றத்துக்குள்ளாகி வரும் கைவினை, அதன் பயில்வு, அறிவு, கைவினைஞர்கள் என்பவற்றைப் பேணுதலின் முதன்மை, அதே நிலவரம் மற்றைய கைவினைகளுக்கும் நிகழ்ந்து கொண்டிருத்தல் ஆகியன பற்றியும் அதனை பேண வேண்டும் என்ற சிந்தனையையும்





விளக்கும் வகையில் இவரது படைப்பு காட்சிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இக் கண்காட்சியின் இறுதிப் பகுதியாக எதை நாம் பெற்றுக் கொண்டோம்? எனும் பகுதியானது நய்னா மங்களநாயகத்தின் அடையாளம் தொடர்பாக கட்டமைக்கப்பட்ட நிர்ணயங்கள் மீதான கேள்விகளாகவே இவரது ஒளிப்படங்கள் சூழமைவுபடுத்தப்பட்டுள்ளது.

நய்னாவின் தந்தை யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவராயினும் அவரது தாயார் டேனியப் பெண். அவர் தன் அடையாளத்தை யாழ்ப்பாண தமிழ் - டேனிய எனும் இரு அடையாளங்களின் இணைவாகவே எப்போதும் காண்கிறார். நய்னாவின் இவ்விரட்டைக் கலப்பு அடையாளம் அவரது சூழல், குடும்பம், மற்றவர்களின் பிம்பத்துடன் ஒத்துப்போகாத நிலவரத்தில் எழும் சிரமங்கள், தனது தந்தையின் பக்கத்தில் உள்ளவர்களுக்கு இடையிலான இடைவெளி, தான் வெளி நபராகவும் உள் நபராகவும் குடும்ப அமைப்பிற்குள் பார்க்கப்படுகின்றமை எனத் தமது சொந்த இடத்தைப் பகுப்பாய்வு செய்வதற்காக அவரது தமிழ் அடையாளத்துடனான நீண்ட இணைப்பை, ஆழத்தை தனது சுயசரிதத்தனமான ஒளிப்படங்களில் சிறைப்பிடித்துள்ளார்.

இங்கு அவரது அடையாளம் பற்றிய தேடல்களிற்காக மரபுரிமை சார்ந்து புலம்பெயர் வெளியில் பயிலப்படும் விடயமாகிய வரவேற்பிற்காக பூரண கும்பம் வைத்தல், சுவரில் தொங்கும் கறுப்பு வெள்ளையாலான அவரது மூதாதையரின் சட்டகமிடப்பட்ட மெய்யுருவின் ஒளிப்படம் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டன. இவற்றின் வழி படைப்பாளி தனது தந்தை வழி அடையாளத்தின் வேர்களைத் தேடும், தொடுப்பதனூடு தான் ஏன் வேறாகப் பார்க்கப்படுகின்றேன் எனக் கேள்வி எழுப்புகின்றார்.

இறுதியாக இவ் ஓவியரின் படைப்பு இடம்பெறும் A தொடக்கம் Z வரையான முரண்பாடுகள் எனும் கலைஞர்களின் நூல் ஓர் கண்ணாடிப் பெட்டிக்குள் ஒரு பக்கத்தை காட்டுவதாக காட்சிப்படுத்தப்பட்டது. இந்நூலில் தமிழ் அகர வரிசையில் மை என்ற எழுத்துக்கான பதிலீடாக மரபுரிமை என்ற சொல் அதற்கான வரைவிலக்கணம் மற்றும் ஒரு ஒளிப்படப் பதிவினை நய்னா மங்களம் செய்துள்ளார்.



இங்கு யாரோ ஒருவருக்கு கையளிப்பதற்காய் நீட்டப்பட்ட ஒரு கையில் 1000ரூபாய் நாணயத்தாள் காணப்படுகின்றது.

இத்தாள் மஹிந்த ராஜபக்சவினால் 2009 யுத்த முடிவின் பின்னர் அவ்வெற்றியைப் புகழ்படுத்த இலங்கையின் தேசியக்கொடியை வெற்றிக்கொடியாக நாட்டும் ஐந்து படைவீரர்களின் படத்துடனும் மறு புறம் தன் சுய உருவப் படத்துடனுமாக வெளியிடப்பட்டது. இந்த நாணயத் தாளைக் கையளிக்கும் கையினை மரபுரிமை எனும் சொல்லுக்கும் அதன் வரைவிலக்கணத்துக்கும் எதிரீடாகக் வைப்பதினூடு நாட்டின் மக்களிற்கு குறிப்பாகப் பெரும்பான்மையினருக்கு அப்போதைய அரசு மரபுரிமையாக எதைக் கையளித்தது? என்பதோடு மரபுரிமையாக நாம் எதை அடுத்த சந்ததிக்குக் கையளிக்கிறோமோ அதுவே அடுத்த சந்ததியால் தொடரப்படும் ஆகவே நாங்கள் எல்லோரும் எதை அடுத்த சந்ததிக்கான மரபுரிமையாகக் கையளிக்கப்போகிறோம் எனும் வினாவையும் நயினாவின் படைப்பு எழுப்புகின்றது.

மரபுரிமை: மாறும் தளம் எனும் காண்பியக் காட்சியானது மரபுரிமை அம்சங்கள் சிலவற்றின் மாற்றங்களைக் காட்சிப்படுத்துவதோடு, அவை எவ்வாறு தொடர்ந்து சவாலுக்குள்ளாகின்றன? அவற்றின் இழப்பும், இன்மையும் எவ்வாறு நினைவுகளைக் காட்சியாக, அடையாளங்களாக மறுகட்டமைப்புச் செய்கின்றன? என்பதையும், கடந்தகாலம், நிகழ்காலத்திற்கு இடையிலான நுண்ணிய தொடர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கவும் அழைக்கின்றன என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

யோ. பிரியதர்சினி
நுண்கலைத்துறை
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்




கொலம்பியா பல்கலைக்கழகம். கணித பேராசிரியர் பாடத்தை துவக்கினார். பாடத்தை துவக்கிய சில நிமிடங்களிலேயே அந்த மாணவனுக்கு உறக்கம் கண்களை சொக்கிக் கொண்டு வந்தது.

அவனையும் அறியாமல் உறங்கினான்.

திடீரென மற்ற மாணவர்களின் சலசலப்பு சத்தம் கேட்டு கண் விழித்தான். கணித வகுப்பு முடிந்து பேராசிரியர் வெளியேறி இருந்தார்.

உறங்கியதை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டே கரும்பலகையைப் பார்த்தான். பேராசிரியர் கரும்பலகையில் இரண்டு கணிதங்களை கேள்வியாக எழுதி வைத்திருந்தார்.

அவனுக்கு புரிந்து போனது. ஆசிரியர் அசைன்மென்ட் கொடுத்திருக்கிறார். உடனே நோட்டில் அந்த இரண்டு கணித கேள்விகளையும் எழுதிக்கொண்டு வீட்டிற்கு புறப்பட்டான்.

மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து தான் கணித வகுப்பு வரும். அதற்குள் அதற்கு விடை எழுதி விடலாம் என நினைத்து வீட்டில் உட்கார்ந்து கணக்கிற்கு விடை எழுதிப் பார்த்தான். வரவில்லை.

வகுப்பறையில் பாடத்தை கவனிக்காமல் போனது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை எண்ணி தன்னை தானே நொந்து கொண்டான். யாரிடம் விடை கேட்பது என்றும் தெரியவில்லை.
தொடர்ந்து இரண்டு நாட்கள் நூலகத்திற்கு சென்று புத்தகங்களை எடுத்து அதிசிரத்தையுடன் படித்துக் கடுமையாகப் போராடியதில் ஒரு கேள்விக்கான விடை வந்தது.

இன்னொரு கேள்விக்கு தீர்வு காண்பதற்கு அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை.

மற்றொரு கேள்விக்கு பதில் எழுதாமல் போனதற்கு கடுமையாக திட்டு கிடைக்கும் என நினைத்துக் கொண்டே இரண்டு நாட்கள் கழித்து வகுப்பறையில் உட்கார்ந்து இருந்தான்.

கணிதப் பேராசிரியர் வந்தார். பாடங்களை நடத்தினார். வகுப்பு முடிந்ததும் வெளியே கிளம்ப தயாரானார்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அசைன்மெண்ட் கொடுத்ததையே பேராசிரியர் மறந்துவிட்டாரோ?

எழுந்து பேராசிரியரிடம் சொன்னான்,

“சார் ..! நீங்க அசைன்மென்டாக கொடுத்த இரண்டு வினாக்களில் ஒன்றுக்கு விடை எழுதி விட்டேன். மற்றொன்றுக்கு விடை எழுத நேரம் கிடைக்கவில்லை. எனக்கு இன்னும் இரண்டு நாட்கள் கூடுதல் அவகாசம் கொடுத்தால் அதற்கும் விடை எழுதி விடுவேன்“

பேராசிரியர் அதிர்ச்சியாய் அவரிடம் பதில் சொன்னார்,
“என்ன சொல்ற..! நான் அசைன்மெண்ட் எதுவும் கொடுக்கவில்லையே. அந்த ரெண்டு வினாக்களில் ஒன்றுக்கு விடை எழுதிட்டேன்னு வேற சொல்ற. எனக்கு ஒண்ணும் புரியலை. அந்த விடைத்தாளை காட்டு பார்ப்போம்“

மாணவன் காட்டினான். படித்துப் பார்த்த பேராசிரியர் அதிர்ந்து போனார்.

“இதுக்கு விடை எப்படி கண்டுபிடிச்ச?“

அந்த மாணவன் உண்மையை ஒத்துக் கொண்டான்,

“நீங்க பாடம் எடுத்த போது என்னையும் அறியாமல் உறங்கி விட்டேன். மற்ற மாணவர்களிடம் இந்த வினாக்களுக்கு விடை கேட்பதற்கும், நீங்கள் வகுப்பறையில் என்ன பாடம் நடத்தினீர்கள் என்பதைக் கேட்டு தெரிந்து கொள்வதற்கும் நேரம் கிடைக்கவில்லை. அதனால் நானாக முயற்சி செய்து பல புத்தகங்களைப் படித்து விடை எழுதினேன்“

பேராசிரியர் அவனை கட்டிப்பிடித்துக் கொண்டு ஆனந்த கூத்தாடி சொன்னார்,

“உலகின் மிகச்சிறந்த கணித வல்லுனர்களாலும் தீர்க்கப்பட முடியாத பல கணக்கு வினாக்கள் இருக்கின்றன. உதாரணமாக அவற்றில் இரண்டை எழுதுகிறேன் எனச் சொல்லி நான் எழுதிய வினாக்கள் தான் அவை. அதற்கு நீ விடை கண்டுபிடித்து இருக்கிறாய் என்பதை நினைக்கும்போது என்னால் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை“

அந்த மாணவன் முதல் வினாவிற்கு விடை கண்டுபிடித்த நான்கு தாள்கள் இன்னும் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இருக்கின்றன.

அந்த மாணவன் தான் உலகப் புகழ்பெற்ற அமெரிக்க கணிதவியலாளர் ஜார்ஜ் பெர்னார்டு டான்சிக் (George Bernard Dantzig).

பின்னாளில் அவர் மாணவர்களிடையே உரையாடிய பொழுது,

“சில நேரங்களில் நாம் தவறவிட்ட சந்தர்ப்பங்கள் தான் நம்மை முன்னேற்றும் படிக்கற்களாக அமைகின்றன.

இதற்கு விடை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை என எனது கணிதப் பேராசிரியர் சொன்ன வார்த்தைகள் என் காதுகளுக்குள்ளும் விழுந்திருக்குமேயானால் என்னுடைய உளவியலானது நம்மாலும் முடியாது என்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கும்.

ஆனால் நான் பாடத்தை கவனிக்காமல் தவறு செய்து விட்டேன் என்கின்ற குற்ற எண்ணமே என்னை தனிச்சையாகப் போராட வைத்தது.

அந்தப் போராட்டமே பல சிக்கலான கேள்விகளுக்கு தீர்வு காண

வைத்தது. இது கணித விடைக்கு மட்டுமான பதில் அல்ல. அனைத்து பிரச்சினைகளுக்குமான பதில்.


அதனால் சில நேரங்களில் நீங்கள் காதுகளை மூடிக்கொள்வதும் நல்லது தான். மற்றவர்களின் விமர்சனங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் நல்லது தான். மற்றவர்களின் எண்ணங்களையும் முடிவுகளையும் நமக்குள் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதும் நல்லது தான்.
ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் தவறவிட்டால், மறு சந்தர்ப்பத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அப்படி உருவாக்கி நீங்கள் அதில் உங்கள் உழைப்பையும் செலுத்திவிட்டால்...

உலகத்தில் விடை காண முடியாத வினாக்களுக்கு விடை காணும் ஒவ்வொரு நேரத்திலும் நீங்களும் ஜார்ஜ் பெர்னார்டு டான்சிக் தான்.

நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு மனிதனும் விஞ்ஞானியாகிப் போவதும், அஞ்ஞானியாகிப் போவதும் காலத்தின் கைகளில் இல்லை. உங்கள் ஞானத்தின் கைகளில் இருக்கிறது“



# தண்டவாளத்தில் இருந்து மின்சாரம் எடுக்கப்போகும் சுவிட்சர்லாந்து



சுவிட்சர்லாந்து தனது ரயில்வே வலையமைப்பை ஒரு மாபெரும் சூரிய மின் நிலையமாக மாற்றுகிறது!

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஏற்றுக்கொள்ளும் துணிச்சலான நடவடிக்கையில், சுவிஸ் ஸ்டார்ட்அப் நிறுவனமான சன்-வேஸ் (Sun-Ways), செயலில் உள்ள ரயில் பாதைகளில் நேரடியாக நீக்கக்கூடிய சோலார் பேனல்களை நிறுவத் தொடங்கியுள்ளது.

இந்த பேனல்கள் தண்டவாளங்களுக்கு இடையில் பொருத்தப்பட்டுள்ளன, மேலும் ரயில் செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காமல் கடந்து செல்லும் ரயில்களின் எடை மற்றும் அதிர்வுகளைத் தாங்கும்.

ஒவ்வொரு கிலோமீட்டர் பாதையும் பல வீடுகளுக்கு மின்சாரம் வழங்க போதுமான மின்சாரத்தை உருவாக்க முடியும், மேலும் சுவிட்சர்லாந்து முழுவதும் 5,000 KM இற்கும் மேற்பட்ட பயன்படுத்தக்கூடிய ரயில் பாதைகளுடன், நாடு விரைவில் வெளிப்படையான பார்வையில் மறைக்கப்பட்ட ஒரு பெரிய சுத்தமான எரிசக்தி மூலத்தைப் பயன்படுத்த முடியும்.





## மேடும் பள்ளமுமாய் பாதை போடும் நாடு



ஹங்கேரியா நாட்டுக்கு நீங்கள் சென்றால் அங்குள்ள நகர வீதிகளில் மிதிவண்டிகள் செல்வதற்கென்றே இப்படியான மேடு பள்ளங்களைக் கொண்ட பாதைகள் இருப்பதை அவதானிப்பீர்கள்.

சைக்கிள் ஓட்டுனர்கள் ஏற்ற இறக்கங்களில்ஆடி அசைந்து போவதால் அவர்களின் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வை சேர்க்கவும், மற்ற வாகனங்கள் அதைப் பயன்படுத்தாமல் இருக்கவும் இப்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## இரத்தப் பரிசோதனைக்கு இனி இரத்தம் எடுக்கத் தேவையில்லை



இந்தியாவில் முதன்முறையாக AI-அழுத்திய ரத்த பரிசோதனை தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஊசி தேவையில்லை, ரத்தமும் எடுக்க வேண்டியதில்லை.

கேமரா முன் முகத்தை காட்டுவதன் மூலம் ரத்த பரிசோதனை முடிவுகளைப் பெறலாம். இந்த தொழில்நுட்பம் தற்போது சுகாதாரத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

# யாழ் இந்துக் கல்லூரியின் கால்கோள் விழா ~ 2025




2025 மே 16 ஆம் திகதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆறாம் தரத்தில் புதிதாக சேரும் மாணவர்களை வரவேற்கும் "கால்கோள் விழா" வெகுவிமரிசையாக நடைபெற்றது. இவ்விழா கல்லூரி அதிபர் திரு. செந்தில் மாறன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், புதிய மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் மதிப்புகூர்ந்த வரவேற்பைப் பெற்றனர். புதிய மாணவர்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், அதிபர் அவர்களின் உரை மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் இருந்தது. அவர், யாழ் இந்துவில் கல்வி என்பது வெறும் புத்தக அறிவைத் தாண்டி, ஒரு மாணவனை முழுமையான நற்குணங்கள் உடைய நபராக மேம்படுத்தும் பயணமாகும்





என வலியுறுத்தினார். வழமையாக ஆண்டுதோறும் நிகழ்வில் கலந்து ஆசி வழங்கும் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் இவ்வாண்டு அவுஸ்திரேலியா பயணத்தில் இருந்த போதும் இணையம் ஊடாக மாணவச் செல்வங்களுக்கு தனது ஆசிகளை வழங்கினார்கள். வேலன் சுவாமிகள் நேரில் வந்து மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்.

பெற்றோர் மற்றும் மாணவர்கள் கல்லூரியின் உயரிய கல்வி பண்பாட்டு நிலைமைகள் குறித்து பெருமிதம் கொண்டனர்.விழா முடிவில், மாணவர்களுக்கு பள்ளியின் அடுத்த கட்ட பயணத்திற்கு உற்சாகமும் நம்பிக்கையும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு, மாணவ வாழ்வின் புதிய தொடக்கத்துக்கு சிறந்த வரவேற்பாக அமைந்தது.















# பொறியியலாளர் சி. தயாபரன் அவர்களுக்கு தூமியின் இதய அஞ்சலி



”நான் தயாபரன் பேசுகிறேன்” என்ற அந்த மென்மையான, நம்பிக்கை தரும் குரல் மறைந்து போனது. ஆம். யாழ் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாக பொறியியலாளராக கடமையாற்றிய குரும்பசிட்டியைச் சேர்ந்த மூத்த பொறியியலாளர், சமூகத்தொண்டர் மற்றும் கல்வி ஊக்குவிப்பாளர் சி. தயாபரன் அவர்கள் 19.05.2025 அன்று இறைபதம் அடைந்தார். இந்த செய்தி அவரது குடும்பத்தினரையும், நண்பர்களையும், மாணவர்களையும் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கம்பஸ் என்ஜினியர் என அனைவராலும் மரியாதையுடன் அழைக்கப்பட்ட அவர் பெயர், ஒரு பெருமிதத்தின் பரிசு. வயதைக் கடந்த நட்பின் நிழலில், பிறர் உள்ளத்தில் ஊன்றிய ஒளி. ஆச. என்று மரியாதை சேர்த்தே ஒவ்வொரு பேரையும் அழைத்தார். அவர் பேச்சில் அன்பும், மரியாதையும் ஒளிந்திருந்தன. தேவைப்படும் தருணத்தில், தாமதமின்றி உதவிக்கரம் நீட்டிய ஒரு உத்தம சேவகர்! ஆலயங்கள், பாடசாலைகளில் தன்னலமற்ற ஆலோசனைப் பணிகள் ஏராளம் செய்துள்ளார்.

தயாபரன் அவர்கள், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவராகவும், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் முக்கிய பங்களிப்பாற்றியவராகவும் சிறந்த சாதனைகள் புரிந்தவர். அவர் தனது வாழ்க்கையைப் படிப்பிற்கும் பங்களிப்பிற்கும் அர்ப்பணித்திருந்தார்.

பொருளாதார சிக்கலால் கல்வியில் பின்னடைவடையக்கூடிய மாணவர்களை நேரடியாகத் தேர்வு செய்து, தேவையான உதவிகளை வழங்கியவர். கல்வியைப் பற்றி கொண்டிருந்த அவரது எண்ணங்கள், “படிப்பே பண்பாடும், எதிர்காலமும்” என்ற மனநிலையை பிரதிபலித்தன.சிறந்த சமூகத்தொடர் வேலைகளில் ஈடுபட்ட அவருக்கு, அதிகம் பேசும் இயல்பில்லை. ஆனால் செயலில்

காட்டிய நியாயம், நேர்மை, நேர்த்தி அனைவரையும் ஈர்த்தது. இலங்கையின் பல பகுதிகளில் அவர் பணியாற்றிய பொறியியல் கட்டிடங்கள் இன்று அவரது தொழில்முறை திறமையைச் சாட்சி செய்கின்றன.அவரது மறைவு தமிழ் சமூகத்துக்கே ஒரு பேரிழப்பாகும். அவரது பண்பும் பங்களிப்பும் எப்போதும் நினைவில் நிலைத்திருக்கும். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் ~ 2025



முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் வருகின்ற 09.06.2025 திங்கள் அன்று நடைபெறவுள்ளது.

1. ஆனி 26 ஆம் திகதி திங்கள் கிழமை - பாக்குத் தெண்டல்

2. ஆனி 2 ஆம் திகதி திங்கள் கிழமை - தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு

3. ஆனி 08 ஆம் திகதி ஞாயிற்று கிழமை - காட்டு விநாயகர் பொங்கல்

4. ஆனி 09 ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசிப் பொங்கல்

இந்த வரலாற்று சிறப்பு மிக்க பாரம்பரிய சடங்குகளில் பக்தர்கள் தங்கள் குழந்தைகளோடு வருகை தந்து கலந்து சிறப்பிக்க வேண்டும். எமது தொன்மைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்துதல் எங்கள் கடமை.



# யாழ்ப்பாண விவசாயத்தின் பாரம்பரிய நீர்ப்பாசனக் கருவி துலா

1970 களில் யாழ்ப்பாணத்தின் விவசாய வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிய நிலைமையில் இருந்தது. பஞ்சமும், மழை குறைவும் சந்திக்கப்படும் காலங்களில் நிலத்தடி நீரை கிணறுகளில் இருந்து எடுத்து வயல்களுக்கு கொண்டு சேர்ப்பது மிகவும் அவசியமானதாக இருந்தது. அப்போது மின்சாரம், எரிபொருள் போன்ற வசதிகள் எல்லா இடங்களிலும் கிடைக்காத நிலையில், விவசாயிகள் தங்கள் அறிவும் உடல் உழைப்பும் வைத்து வடிவமைத்த ஓர் அழகான கருவியே துலா.

## துலா என்றால் என்ன?

துலா முறை என்பது ஒரு பாரம்பரிய நீரெடுக்கும் கருவியாகும். இது ஒரு சாலையிலிருந்து தாழ்வான வயல்களுக்கு அல்லது கிணற்றில் இருந்து மேலே உள்ள பாசன வாய்க்காலுக்கு நீரை எடுக்க அமைக்கப்பட்ட எளிய இயந்திரமாகும். இது பழங்கால இந்திய அறிவியலைச் சார்ந்த "லீவர்" (leverage) அடிப்படையில் இயங்கும்.

## துலாவின் அமைப்பு

துலாவின் அமைப்பு மிகவும் எளிமையானது. ஒரு நீளமான மரக்கம்பி அல்லது தண்டு (எடுத்துக்காட்டாக நாரம்பளை மரம்) காணப்படும். அதன் மையத்தில் ஒரு தூணில் சமநிலைப் புள்ளியில் கட்டப்பட்டுள்ளது. ஒரு முனையில் தண்ணீர் எடுக்கும்

கூடை அல்லது வாளி கட்டப்பட்டுள்ளது. மறுமுனையில் மனிதர் ஏறிச் செல்ல ஒரு அடிக்கட்டை வைத்திருப்பர்.

### இயங்கும் முறை

1. முதலில் துலாவின் கூடை பகுதியை கிணற்றில் இழுக்கும் வகையில் தள்ளுவர்.
2. பின்னர் மனிதர் துலாவின் மறுமுனையில் ஏறி நின்று கீழ் தாழ்வார்கள்.
3. அவரது உடல் எடையால் துலா கீழே இறங்கி, கூடை மேலே எழும்.
4. மேலே வந்த நீரை ஒரு வாயிலில் ஊற்றி வயல்களுக்கு பாய்ச்சுவர்.
5. இந்தச் செயல் தொடர்ச்சியாக நடைபெறும்.

### யாழ்ப்பாணத்தில் பயன்பாடு




யாழ்ப்பாணம் ஒரு வறட்சி பாதிக்கப்படும் பகுதியாக இருந்ததாலும், கிணற்றில் இருந்து நீர் எடுக்க வேண்டிய தேவை அதிகமாக இருந்தது. அந்த காலத்தில் மோட்டார், பம்புகள் எல்லாம் பொதுவாக இல்லை. அந்த இடத்தில் இத்தகைய துலா கருவிகள் விவசாயிகள் வாழ்வுக்கு மிகவும் உதவியதாக இருந்தன.

பனைத்தோட்டங்கள், பயிர் நிலங்கள், வெள்ளடிச் சாம்பல் நிலங்கள் போன்றவற்றுக்கு துலா பயன்படுத்தப்பட்டது. கையால் இயக்கப்படும் கருவியாகவே இது இருந்ததால், எரிபொருள் செலவு இல்லாமல் இயங்கி வந்தது.

இன்றைய நிலை
இப்போது தொழில்நுட்ப வளர்ச்சியால் துலா முறைகள் பெரும்பாலும் காணமுடியவில்லை. மின்மோட்டார்கள், டீசல் பம்புகள், ஸ்பிரிங்கிளர் முறைகள் போன்றவை அவற்றை மாற்றியுள்ளன. ஆனால், துலா முறை நம் பூர்வீக அறிவியல் ஞானத்தின் ஓர் சான்றாக இருக்கிறது.



# விராட் எனும் ஒரு போர் வீரனின் ஓய்வு

இந்திய கிரிக்கெட்டின் முன்னணி வீரரான விராட் கோலி, 2025 மே 12 அன்று தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் ஓய்வை அறிவித்து, ஒரு பெரும் டெஸ்ட் கிரிக்கெட் பாரம்பரியத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். 2008ம் ஆண்டில் தனது சர்வதேச பயணத்தை தொடங்கிய கோலி, 123 டெஸ்ட் போட்டிகளில் 9,230 ரன்கள் எடுத்துள்ளார்.

10000 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்ட முதல் இந்த ஓய்வை எடுத்தமை இரசிகர்களை ஆச்சரியப்படுத்தினாலும் இந்தியாவில் கொட்டி கிடக்கும் இளம் ஆற்றலாளர்களுக்கு வழிவிட வேண்டியதும் கட்டாயமானது ஆகிறது.




அவரது ஆட்டத்திறன் மட்டுமல்லாமல், அணியின் கேப்டனாக 68 போட்டிகளில் பங்கேற்று 40 வெற்றிகளை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சச்சின் டெண்டுல்க்கர் போன்ற ஆளுமையுடன் ஒப்பிட்டால், சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் 15,921 ரன்கள் எடுத்தாலும், கோலி குறுகிய காலத்தில் அதிக வெற்றிகள் மற்றும் வெளிநாட்டு மண்ணில் தொடர் வெற்றிகள் பெற்றுள்ளார்.

இருவரும் வெவ்வேறு கால கட்டங்களில் விளையாடியவர்கள் என்பதால் ஒப்பிட




முடியாதவர்கள். சச்சின் சச்சின் தான். கோலி கோலி தான். சச்சின் அமைதியான தன்னம்பிக்கையின் முதன்மை முகமாக இருந்தால், கோலி உற்சாகமான தலைமைத்துவத்தின் பிரதிபலிப்பாக விளங்கினார்.

உலக கிரிக்கெட்டில் விராட் கோலி தனித்துவமான ஒரு நட்சத்திரம். வெற்றி தோல்விகளுக்கு அப்பாற்பட்டு போராடுவதில் ருசி கண்டவர். சச்சின் வழியாக கிரிக்கெட் விளையாட்டை கொண்டாடி மகிழ்ந்த ரசிகர்களுக்கு கங்குலி கொஞ்சம் வித்தியாசம் காட்டினார். கங்குலியின் கோபம் மற்றும் கள வாக்குவாதம் ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. சாதுவான சச்சினின் எதிர் துருவத்தை தேடி அலைந்த கூட்டத்துக்கு கங்குலி தீனி போட்டது உண்மை.

விராட் கோலி கால் ஊன்றிய காலத்தில் அவர் வெளிப்படுத்திய உணர்வெழுச்சி, கிரிக்கெட் விளையாட்டுக்கு சம்பந்தமில்லை என்று உறுதியாக நம்பினேன். அந்த நிலைப்பாட்டில் அவரை நிராகரித்தேன். சச்சின் கங்குலி போன்ற வழிகாட்டிகளை ஏற்றுகொண்ட மனதுக்கு கோலி துச்சமாகத் தெரிந்தார். எல்லாம் கொஞ்ச காலம்.

விராட் கோலி கிரிக்கெட் விளையாட்டில் ஒரு கால்பந்தாட்ட வீரனோடு ஒத்துப்போனார். குத்துச்சண்டை வீரனின் பெருங்கோபத்தை மைதானத்தில் கட்டவிழ்த்து விட்டார். இங்கு எனக்கொரு கேள்வி உண்டு. கிரிக்கெட் விளையாட்டை இத்தனை உக்கிரமாக ஆட வேண்டுமா? முன்னவர்கள் சாதுக்கள். என் மூப்பர்கள் மகா முனிகள். கோலி ஏன் இவ்வளவு தீவிரம் காட்டவேண்டும்?

அதற்கான பதிலையும் கோலியே தந்தார். மைதானம் முழுவதும் நான்கு மணிநேரம் வெறித்தனமாக ஓடி முடித்துக் கையில் மட்டையுடன் கோலி களத்தில் இறங்கும்போது பிரமித்துப் போனேன். அடுத்த நான்கு மணிநேரம் மின்னல் வேகத்தில் ரன்களை குவித்தார். எப்படி இவ்வளவு உற்சாகம்.





எங்கிருந்து வருகிறது இத்தனை கரை புரண்ட ஆற்றல்?

விராட் கோலியின் உடல் மற்றும் மனம் ஒருநொடி கூட களைத்துப் பார்த்தது கிடையாது. மைதானம் அல்லது போராட்டத்தை ரசிக்கிற ஒருவனின் தம்மம் அது.

இந்திய கிரிகெட் வரலாற்றுக்கும் விராட் கோலிக்கும் என்ன வித்தியாசம் என்றால் இது ஒன்றுதான் என அடித்துச் சொல்வேன். கோலி ஒரு மனித இயந்திரம்.

மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் அசத்திய ஒரே அவதாரம். என் காலத்தில் நான் கொண்டாடிய அனைத்து கிரிகெட் வீரர்களுக்கும் மேலான உடல் மற்றும் மன வலிமை கொண்ட மாவீரன் கோலி.

கிரிக்கெட்டின் பாரம்பரிய வடிவமான டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் உன் பொற்பாதங்களில் முத்தங்கள் என் காதலனே.



அவரது டெஸ்ட் ஓய்வு, இந்திய அணிக்குள் ஒரு புதிய தலைமுறைக்கு வாய்ப்பை வழங்குகிறது. இளம் வீரர்கள் வந்தாலும், விராட் கோலியின் சாதனைகள், தலைமுறைகளை வழிநடத்தும் ஒளியாக நிலைத்திருக்கும்.